©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 284] CHENNAI, TUESDAY, JUNE 22, 2021
Aani 8, Pilava, Thiruvalluvar Aandu-2052

Part IV—Section 1

Tamil Nadu Bills

BILLS INTRODUCED IN THE LEGISLATIVE ASSEMBLY OF THE STATE OF TAMIL NADU

Under Rule 130 of the Tamil Nadu Legislative Assembly Rules, the following Bill which was introduced in the Legislative Assembly of the State of Tamil Nadu on 22nd June, 2021 is published together with Statement of Objects and Reasons for general information:—

L.A. Bill No. 17 of 2021

A Bill further to amend the Tamil Nadu Fiscal Responsibility Act, 2003.

BE it enacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Seventy-Second Year of the Republic of India as follows:-

Short title and commencement.

1. (1) This Act may be called the Tamil Nadu Fiscal Responsibility (Amendment) Act, 2021.

(2) It shall come into force at once.

Amendment of section 4.

Tamil Nadu Act 16 of 2003.

2. In section 4 of the Tamil Nadu Fiscal Responsibility Act, 2003, in sub-section (2),-

(1) in clause (a), for the expression "2021-2022", the expression "2023-2024" shall be substituted;

(2) in clause (b), for the expression "31st March 2022", the expression "31st March 2024" shall be substituted.

STATEMENT OF OBJECTS AND REASONS

The 15th Finance Commission in its Report for 2021-2026 has recommended an extra annual borrowing space for the States, of the magnitude of 0.50 per cent of their Gross State Domestic Product for each of the first four years of the award covering the period 2021-2022 to 2024-2025, based on certain performance criteria in the power sector. Further, the Finance Commission has also recommended for fixing the net borrowing limit to Gross State Domestic Product at 4 per cent, 3.5 per cent and 3 per cent, for the years 2021-2022, 2022-2023 and 2023-2024 to 2025-2026, respectively.

2. Based on the aforesaid recommendations of the Finance Commission, the Government have decided to amend the Tamil Nadu Fiscal Responsibility Act, 2003 (Tamil Nadu Act 16 of 2003) to extend the time limit set out to eliminate the revenue deficit and reduce fiscal deficit to three per cent of Gross State Domestic Product by 31st March 2024.

3. The Bill seeks to give effect to the above decision.

Dr. PALANIVEL THIAGA RAJAN,
Minister for Finance and
Human Resources Management.

Chennai-600 009,
22nd June 2021.

K. SRINIVASAN,
Secretary.

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 284A] சென்னை, செவ்வாய்க்கிழமை, ஜூன் 22, 2021
ஆனி 8, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2052

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2021–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2021

2003 –ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 16/2003.

2. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் 4 –ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில்,–

(1) (a) ஆம் கூறில், "2021 2022" எனும் சொற்றொடருக்காக, "2023–2024" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (b) ஆம் கூறில், "2022 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி" எனும் சொற்றொடருக்காக, "2024 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

நோக்கக் காரண விளக்கவுரை

15 ஆம் நிதிக்குழுவானது தனது 2021–2026–க்கான அறிக்கையில், எரிசக்தி துறை குறித்த சில செயல்திறன் அளவுகோலின் அடிப்படையில், 2021–2022 முதல் 2024–2025 வரையிலான கால அளவினை உள்ளடக்கிய பரிந்துரைக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் மாநிலங்கள், ஆண்டொன்றிக்கு மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.05 விழுக்காடு அளவு கூடுதல் கடன் பெறுவதற்கான வழிவகைக்கு பரிந்துரைத்துள்ளது. மேலும், நிதிக்குழுவானது, மொத்த மாநில உற்பத்தி மதிப்பீட்டிற்கு நிகர கடன்பெறுதலுக்கான வரம்பினை 2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 முதல் 2025–2026 ஆண்டுகளில் முறையே 4 விழுக்காடு, 3.5 விழுக்காடு மற்றும் 3 விழுக்காடாக பரிந்துரைத்துள்ளது.

2. நிதிக்குழுவின் மேற்சொன்ன பரிந்துரைகளின் அடிப்படையில், வருவாய் பற்றாக்குறையை நீக்குவதற்கும், நிதிநிலை பற்றாக்குறையை மொத்த மாநில உற்பத்தி மதிப்பீட்டில் மூன்று விழுக்காடு வரை குறைப்பதற்குமான காலவரம்பினை குறித்தபடி 2024 மார்ச்சு 31 வரை நீட்டிக்க, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 16/2003) திருத்தம் செய்ய அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

முனைவர்.பழனிவேல் தியாக ராஜன்,
நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.

சென்னை-600 009,
22 ஜூன் 2021.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.